பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

21 11 2023 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா – ஆஸ்திரேலியா பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சர்களிடையேயான பேச்சுகள் நேற்று புதுதில்லியில் நடைபெற்றது.

2. மகளிருக்கான அனைத்து நலத்திட்டங்களையும் மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. பகவந்த் கூபா கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 15 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

4. சென்னையில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலம் நான்கு லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று அமைச்சர் திரு. ராஜகண்ணப்பன் கூறியுள்ளார்.

5. உலகக் கோப்பை கால்பந்து போட்டி தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று கத்தாரை எதிர்கொள்கிறது.

--இனி விரிவான செய்திகள்--

<<<<>>>>

இந்தியா – ஆஸ்திரேலியா நாடுகளின் பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சர்களிடையேயான பேச்சுகள் நேற்று நடைபெற்றது.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த பேச்சுகளில் பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் திரு. ரிச்சர்ட் மார்லஸ், அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. **Penny Wong** ஆகியோர் பங்கேற்றனர்.

பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் முதலீடு எரிசக்தி, பருவநிலை மாற்றம் கனிமங்கள், அறிவியில் மற்றும் தொழில்நுட்பம், விண்வெளி, கல்வி, இருநாட்டு மக்களிடையேயான தொடர்பு உள்ளிட்ட துறைகளில் தலைவர்கள் தங்கள் கருத்துகளை பரிமாறிக்கொண்டனர்.

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் லட்சக்கணக்கான இந்திய சமூகத்தினர், மாணவர்கள் ஆகியோர் இரு நாடுகளுக்கு இடையே

இணைப்புப் பாலமாக திகழ்கின்றனர் என்று திரு. ஜெய்சங்கர் அப்போது கூறினார்.

இரு நாடுகளுக்கு இடையேயான நட்புறவு வளர்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

மகளிருக்கான அனைத்து நலத்திட்டங்களையும் மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை இணையமைச்சர் திரு. பகவந்த் கூபா கூறியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் தானிப்பாடியில் பழங்குடியின மக்களை நேற்று மாலை அவர் சந்தித்துப் பேசினார்.

மத்திய அரசின் அனைவருக்கும் வங்கிக் கணக்கு திட்டத்தின் மூலம் 45 கோடி பேர் பயனடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஏழை மக்கள் முன்னேறுவதற்கு முத்ரா வங்கிக் கடன் திட்டத்தின் மூலம் கடன் உதவி வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

மகளிருக்கான மத்திய அரசின் பல்வேற திட்டங்களையும் திரு. பகவந்த் கூபா பட்டியலிட்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 15 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாநில உணவு அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இந்த இலக்கு நிறைவேற்றப்பட்டுவிடும் என்று கூறினார்.

முன்னதாக பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. பெரியசாமி, வேளாண் நிலம் உள்ளவர்கள் சுயஉதவிக் குழுவினர், சிறு வணிகர்ளுக்கு வழங்கப்படுவதைப் போல நிலமற்றவர்களுக்கும் கடனுதவிகள் வழங்கப்படுவதாகக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் ஒரு கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு அமைச்சர்கள் வழங்கினார்கள்.

<<<<>>>>

சென்னையில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலம் நான்கு லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று பிற்படுத்தப்பட்டோர் அமைச்சர் திரு. ராஜகண்ணப்பன் கூறியுள்ளார்.

ராமநாதபுரத்தில் மாவட்ட தொழில் மையம் மூலம் நடைபெற்ற தொழில் முதலீடுகள் மாநாட்டில் அவர் பங்கேற்றுப் பேசினார்.

ராமநாதபுரம் மாவட்டத்தை தொழில் நிறைந்த மாவட்டமாக உருவாக்கிட முதலீட்டாளர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று திரு. ராஜகண்ணப்பன் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

நாமக்கல்லில் அதிநவீன பால் பதப்படுத்தும் ஆலை அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கும் என்று மாநில வனத்துறை அமைச்சர் திரு. மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இப்பணிகளை தேசிய பால்வள வாரியம் மேற்கொள்ளும் என்று கூறினார்.

90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த நவீன பால் பதப்படுத்தும் ஆலை அமைக்கப்பட உள்ளதாகவும் திரு. மதிவேந்நன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையை அதிநவீன சிறப்பு மருத்துவமனையாக அமைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுக் கணக்குக் குழுத் தலைவர் திரு. செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

<<<<>>>>

நாடு முழுவதும் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்த முகாமில் தகுதியுடையவர்கள் தங்கள் பெயர்களை சேர்க்குமாறு தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், அடுத்த மாதம் 9ஆம் தேதி வரை நடைபெற உள்ள இம்முகாமில் முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களை மேற்கொள்ள விரும்பும் வாக்காளர்களும் இதனை பயன்படுத்திக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே சென்னை மாவட்டத்தை உள்ளடக்கிய 16 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் குறித்த ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், வாக்காளர் பட்டியல் பார்வையாளர் திரு. மைதிலி ராஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் ‘நமது லட்சியம் – வளர்ச்சியடைந்த பாரதம்’ யாத்திரை பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற்று வரும் இந்த யாத்திரை நிகழ்ச்சியில் ஏராளமானோர் பங்கேற்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் அடுத்த 4 தினங்களுக்கு பரவலாக லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கனமழையைப் பொறுத்தவரை வட கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும், உள்மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மிதமான மழையும் பெய்யக்கூடும் என்று கூறியுள்ளது.

சென்னை மற்றம் புறநகர்ப் பகுதிகளில் பொதுவாக மிதமான மழையும், சில இடங்களில் சற்று பலத்த மழையும் பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் நேற்று முதல் பரவலாக மழை பெய்து வருகிறது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைன் நாட்டு ராணுவத்திற்கு மேலும் 100 மில்லியன் டாலர் அளவிலான உதவிகள் அளிக்கப்படும் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. **Llyod Austin** அறிவித்துள்ளார்.

<<<<>>>>

அர்ஜென்டினா அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற திரு. சேவியர் மிலேவுக்கும், **Luxemberg** நாட்டுப் பிரதமராக பதவியேற்றுள்ள திரு. **Lucfrieden**–க்கும் பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தேர்தல் நடைபெறும் 5 மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் இதுவரை ஆயிரத்து 760 கோடி ரூபாய் மதிப்பிலான ரொக்கம், ஆபரணங்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<>>>>

மேகாலயா தலைநகர் ஷில்லாங்கில் சர்வதேச சுற்றுலா கண்காட்சியை மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி இன்று தொடங்கி வைக்கிறார்.

<<<<>>>>

கோயம்பத்தூரில் இருந்து ஜோத்பூருக்கு இன்றிரவு மணி 11.55க்கு சிறப்பு ரயில் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<>>>>

கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில் 2 ஆயிரத்து 224 பயனாளிகளுக்கு அமைச்சர் திரு. எ.வ. வேலு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

<<<<>>>>

தேனி மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக 2 ஆயிரத்து 215 பேருக்கு அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி கடனுதவிகளை வழங்கினார்.

<<<<>>>>

மக்களின் தேவைக்கேற்ப அனைத்து ஆவின் பால் வகைகளும் எவ்வித தங்குதடையுமின்றி வினியோகம் செய்யப்படுவதாக பால்வளத்துறை இயக்குநர் டாக்டர் வினித் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடப்பாண்டு பயிர்க் கடனாக 350 கோடி ரூபாய் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திருமதி சரயு கூறியுள்ளார்.

<<<<>>>>

தருமபுரி மாவட்டம் பருவதனஹள்ளியில் ஆயிரத்து 915 பயனாளிகளுக்கு கடன் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி சாந்தி வழங்கினார்.

<<<<>>>>

விளையாட்டுச் செய்திகள்

உலகக் கோப்பை கால்பந்து போட்டி தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று கத்தாரை எதிர்கொள்கிறது.

புவனேஷ்வரில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

சீன மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

ஆடவர் பிரிவில் இந்திய வீரர் ஹெச்.எஸ். பிரனாய் தைவானின் **Tien Chen Chou**-ஐ எதிர்கொள்கிறார்.

மகளிர் பிரிவில் இந்தியாவின் ஆகர்ஷி கஷ்யப் - சீனாவின் **Yi Man Zhang**-ஐ எதிர்கொள்கிறார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் ரங்கி ரெட்டி – சிராக் ஷெட்டி இணை இங்கிலாந்து இணையை எதிர்கொள்கிறது.

**<<<<>>>>**

வெளியுறவு இணையமைச்சர் திரு. முரளிதரன் தான்சானியா சென்றுள்ளார்.

தலைநகர் **Zanzibar**-ல் உள்ள சென்னை ஐ.ஐ.டி. வளாகத்திற்கு சென்ற அவர், அங்குள்ள மாணவர்கள், ஆசிரியர்களுடன் உரையாடினார்.

சென்னை ஐ.ஐ.டி. கல்வி நிலையம் தான்சானியாவில் தொழில்நுட்ப புதுமைக் கண்டுபிடிப்புகளுக்கு முக்கிய காரணியாக விளங்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

தமது பயணத்தின்போது தான்சானியா அதிபர் திரு. **Hussain Ali** மற்றும் அந்நாட்டு அமைச்சர்களை சந்தித்துப் பேச உள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக கூட்டத்திலும் திரு. முரளிதரன் பங்கேற்க உள்ளார்.

**<<<<The End>>>>**